ஸ்ரீ :

ஸ்ரீமதே ராமானுஜாய நம :

நம்பெருமாள் விஜயம்

(ஸத்யம் ஸத்யம் புந: ஸத்யம் யதிராஜோ ஜகத்குரு:)

(மலர்- 299) Jul (2) / 2019

நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவன்

'ஸ்ரீ அஹோபில தாஸன்' க.ஸ்ரீதரன்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:
திருவே தஞ்சம்
திருவரங்கனே தஞ்சம்
தஞ்சமடைந்த நம் ராமானுஜன் திருவடிகளே தஞ்சம்

கைப்பொருள்கள் முன்னமே கைக்கொண்டார் காவிரி நீர்
செய்ப்புரள ஓடும் திருவரங்கச் செல்வனார்
எப்பொருட்கும் நின்று ஆர்க்கும் எய்தாது நான் மறையின்
சொற்பொருளாய் நின்றார் என் மெய்ப்பொருளும் கொண்டாரே.

காவேரி வர்த்ததாம் காலே காலே வர்ஷது வாஸவ:
ஸ்ரீரங்கநாதோ ஜயது ஸ்ரீரங்கஸ்ரீச்ச வர்த்ததாம்

ஸத்யம் ஸத்யம் புந: ஸத்யம் யதிராஜோ ஜகத்குரு:

உட்பொதிவு

1. லக்ஷ்மீ தந்த்ரம் 3

2. ஸ்ரீபாஷ்யம் ……………………………………………………………………….......5

3. ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம் ………………………………………………….………8

4. ஆசார்ய ஹ்ருதயம்…………………………………………………………………..15

5. திருவாய்மொழி (ஈடு வ்யாக்யானம்)..……....……………………………………..20

6. சது: ச்லோகீ (பெரியவாச்சான்பிள்ளை, நிகமாந்த மஹாதேசிகன் வ்யாக்யானங்கள்) ……………………………………………………………………………………...29

Website: www.namperumal.com email: sridharan_book@yahoo.co.in
Blog: namperumal.wordpress.com Groups: groups.yahoo.com/emperumanar

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீபாஞ்சராத்ர ஆகம நூலான

லக்ஷ்மீ தந்த்ரம்

(பகுதி – 119)

21. த்ரைலோக்ய ஐச்வர்யதா தேவீ விஷ்ணுபத்நீ ஜகத்ப்ரஸூ:
இதி வாச்யம் ஜகத் யோநி பீஜஸ்ய அப்ஜாம் விசிந்தயேத்

பொருள் – அந்த உபாஸகன் பீஜ ஜகத்யோநியாக உள்ள அப்ஜையை (மஹாலக்ஷ்மி) த்யானிப்பானாக. அவளே (அதாவது நான்) மஹாவிஷ்ணுவின் பத்னியாகவும், மூன்று லோகங்களுக்கான ஐச்வர்யமாகவும், இந்த ஜகத்தின் ஆதாரமாகவும் உள்ளாள்.

22. ரதி: க்ரீடாபிதா லோகே க்ரீடா ச ஸ்யாத் க்ரியா மம
இந்தநம் தீபநம் ஜ்ஞாநமிச்சா சேகாரதர்சிதா:

பொருள் – பொதுவாக இந்த உலகில் "ரதி" என்னும் சொல்லானது லீலைகளைக் குறிப்பதாகும். எனது செயல்கள் அனைத்துமே லீலைகளாக உள்ளன. "இந்தநம்" என்னும் சொல்லானது தீபத்தையும், ஞானத்தையும், இச்சையையும் குறிப்பதாகும்.

23. த்ரைலோக்யம் து த்ரயோ லோகாஸ்தே ச ஜீவாஸ்த்ரிதா ஸ்திதா:
தேஷாம் ஐச்வர்ய தாநேந த்ரைலோக்ய ஐச்வர்யதாஹ்விகா

பொருள் – "த்ரைலோக்யம்" என்பது மூன்று லோகங்களைக் குறிப்பதாகும்; அதாவது பத்தர், முக்தர், நித்யர் என்பதான மூன்று நிலைகளின் உள்ள ஜீவாத்மாகளைக் குறிப்பதாகக் கொள்ளவேண்டும். இவர்களுக்கான ஐச்வர்யத்தை அளிப்பவளாக உள்ள நான், "த்ரைலோக்ய ஐச்வர்யதா" எனப்படுகிறேன்.

24. அப்ரமேயாதிநா லோகாந் விதத்ய புவநாத்வநா
தஸ்மிந்நேவ பரே பூயோ வ்யோமேசே பரமாத்மநி
25. ஸந்திஷ்டதே பரேத்யேவம் உதய அஸ்தமயௌ மம
ஈத்ருசீயம் மஹாவித்யா ஜகத்யோநிர்கிராம் ப்ரஸூ:

பொருள் – இப்படிப்பட்ட நான், அளவிட இயலாதவனாகிய அப்ரமேயனுடன் இணைந்து இந்த ஜகத்தின் ஸ்ருஷ்டிக்கான செயலைத் தொடங்குகிறேன். பின்னர் அதே உயர்ந்த ஆத்மாவாகிய வ்யோமேசத்தில் லயிக்கிறேன். இதுவே எனது உதயம் மற்றும் அஸ்தமன செயல்களாகும். இதுவே வாக்கின் ஆதாரமாக உள்ளதும் ஜகத்யோநி எனப்படுவதும் ஆகிய மஹாவித்யையின் வர்ணனை ஆகும்.

ஸ்ரீரங்கநாச்சியார் திருவடிகளே சரணம்
ஸ்ரீகமலவல்லி நாச்சியார் திருவடிகளே சரணம்

... தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

பகவத் ராமானுஜர் அருளிச் செய்த

ஸ்ரீபாஷ்யம்

(பகுதி – 299)

அதிகரணம் – 3 - ஸங்க்யோப ஸங்க்ரஹாதிகரணம்

ஆராயப்படும் விஷயம் – இந்த்ரியங்கள், ஆகாசம் போன்ற அனைத்தும் ப்ரஹ்மத்தை அந்தர்யாமியாகக் கொண்டவையே ஆகும் என்று நிரூபிக்கப்பட்ட உள்ளது.

1-4-11 ந ஸங்க்யோபஸங்க்ரஹாத் அபி நாநா பாவாத் அதிரேகாத் ச

பொருள் – எண்ணிக்கையைக் கூறுகிறது என்பதால் ஸாங்க்யமதம் கூறப்படுகிறது என்றாகாது; வேறுபாடுவதாலும், அதிகம் உள்ளதாலும்.

விஷயம் - வாஜஸநேயர்கள் ஓதும்போது, ப்ரு. (4-4-17) – யஸ்மிந் பஞ்ச பஞ்சஜநா: ஆகாசச்ச ப்ரதிஷ்டித: | தமேவமந்ய ஆத்மாநம் வித்வாந் ப்ரஹ்மாம்ருதோ அம்ருதம் - எந்த ஆத்மாவிடம் ஐந்து "ஐந்து பேர்கள்" மற்றும் ஆகாசம் ஆகியவை நிலைபெறுகின்றனவோ, அவனே ஆத்மா; அந்த ஆத்மாவை இப்படியாக அறிபவன், முக்தி அடைகிறான் - என்று கூறுகிறார்கள். இங்கு ஒரு சந்தேகம் எழுகிறது - இந்த மந்த்ரத்தில், கபிலதந்த்ரத்தில் கூறப்படும் ஸித்தாந்தம் வெளிப்படுத்தப்படுகிறதா, இல்லையா? இதில் சரியானது? (அதாவது, ஐந்து "ஐந்து பேர்" = இருபத்து ஐந்து என்பது ஸாங்கியர்களுடைய இருபத்து ஐந்து தத்வங்களோ என்ற சந்தேகம் ஏற்படுகிறது).

பூர்வபக்ஷம் – கபிலதந்த்ரத்தில் கூறப்பட்டதே இங்கு வெளிப்படுகிறது. ஏன்? (உபநிஷத் வாக்கியத்தில் உள்ள) "பஞ்சஜநா" என்ற சொல்லானது, "பஞ்ச = ஐந்து" என்று சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளதால், இது இருபத்து ஐந்து என்பதைக் குறிப்பதாகிறது. இங்கு கூறப்படுவது என்னவென்றால் - "பஞ்சஜநா:" என்னும் தொகைமொழியானது (வடமொழியில் ஸமாஸம்[1]) ஒரு கூட்டத்தைக் குறிப்பதாகும். "பஞ்சஜநா: - பஞ்சாநாம் ஜநாநாம் ஸமூஹா: - அதாவது ஐந்து பேர்கள் உள்ள ஒரு கூட்டம்" என்பதாகும். இது, "பஞ்சபூல்ய - ஐந்து வைக்கோல் கட்டுக்கள் கொண்டு ஒரு கட்டு" என்பது போன்றதாகும். "பஞ்சஜாநா:" என்று, பால் வேறுபாடு ஏற்படுவது, வேதத்தால் ஏற்கப்படுவதே ஆகும் (அதாவது பஞ்சஜநீ என்று பெண் பாலில் இருக்கவேண்டிய சொல்லானது இங்கு பஞ்சஜநா என்று புல்லிங்கமாக, அதாவது அலிப்பாலில், மாறியுள்ளதற்கு விளக்கம் தருகிறார்).

இது போன்று எத்தனை கூட்டங்கள் உள்ளன என்றால், "பஞ்சஜநா:" என்பதன் அடைமொழியாக முதலில் கூறப்படுகின்ற "பஞ்ச = ஐந்து" என்பதன் மூலம், ஐந்து கூட்டங்கள் (அல்லது குழுக்கள்) உள்ளன என்றாகிறது; இது "பஞ்ச பஞ்சபூல்ய: - ஐந்து வைக்கோல் கட்டுகள் கொண்ட ஐந்து கட்டுகள்" என்பது போன்றாகும். ஆகவே, "பஞ்ச பஞ்சஜநா: - ஐந்து ஐந்துபேர்கள்" என்பது, இருபத்துஐந்து என்பதாகிறது. இந்த இருபத்துஐந்து எவை என்றால், மோக்ஷத்திற்கான தகுதி பெறுவதற்காக முமுக்ஷுக்களால் அறியப்படவேண்டியவை என்று ஸ்ம்ருதிகளில் கூறப்படுகின்ற ப்ரக்ருதி முதலானவை ஆகும்.

கபில மதத்தில், ஸாங். (3) – மூலப்ரக்ருதி: அவிக்ருதிர் மஹாதாத்யா ப்ரக்ருதி விக்ருதய: ஸப்த | ஷோடசகச்ச விகாரோ (விகாரஸ்து) ந ப்ரக்ருதிர் ந விக்ருதி: புருஷ: – அனைத்திற்கும் காரணமாக உள்ள மூலப்ரக்ருதியானது வேறு ஒன்றின் கார்யம் அல்ல. மஹத் தொடக்கமாக உள்ள ஏழும் (மஹத், அஹங்காரம், ஆகாசம், வாயு, அக்னி, நீர், பூமி), ஒன்று மற்றொன்றின் காரணமாகவும், ஒன்று மற்றொன்றின் கார்யமாகவும் உள்ளவை; பதினாறு சேர்ந்த கூட்டம் (ஐந்து பூதங்கள் மற்றும் பதினோரு இந்த்ரியங்கள்) என்பது எப்போதும் கார்யமாகவே

---

[1] ஸமாஸம் என்பதற்கு உதாரணம் "ராமக்ருஷ்ணன்"

உள்ளது. ஆத்மாவானது கார்யமும் அல்ல, காரணமும் அல்ல - என்று கூறப்பட்டது. ஆகவே இந்த மந்த்ரத்தில் கபிலதந்த்ரமே கூறப்பட்டுள்ளது.

தென்னரங்கன் திருவடிகளே சரணம்
தென்னரங்கன் செல்வம் முற்றும் திருத்தி வைத்த இராமாநுசன் திருவடிகளே சரணம்

... தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீவேதாந்த மஹாதேசிகன் அருளிச் செய்த

ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம்

(பகுதி – 299)

சரமச்லோகத்தினுடைய ஆழ்பொருள்கள் சுருக்கம்

மூலம் – இச் ச்லோகத்தில் பதங்களில் அடைவே (1) அதிகாரி விசேஷம், ஆகிஞ்சந்ய புரஸ்காரம், துஷ்கர பரிகராந்தர நைரபேக்ஷ்யம், அசக்ய ப்ரவ்ருத்தி அநைசித்யம், துஷ்கர அபிநிவேச வையர்த்யம், உபாய விசேஷத்தின் கணையுடைமை. (2) முமுக்ஷுவுக்கு சரண்ய விசேஷம், சரண்யனுடைய ஸுலபத்வ ஸுசீலத்வாதி குணபூர்ணத்வம், ஹித தம உபதேசித்வம். (3) ப்ராப்யனே ப்ராபகனானமை, நிரபேக்ஷ ஸர்வ விஷய நிஷ்ப்ரத்யூஹ கர்த்ருத்வம், வ்யாஜமாத்ர ப்ரதீக்ஷத்வம், உபாயாந்தர வ்யவதாந நிரபேக்ஷத்வம், பரிகராந்தர நிரபேக்ஷ ப்ரஸாத்யத்வம், ஸர்வ பலார்தி சரண்யத்வம், சரண்யாந்தர பரிக்ரஹ அஸஹத்வம், சரண்ய வைசிஷ்டயம். (4) உபயாந்தர ஸ்தாந நிவேச்யத்வம், பர ஸ்வீகர்த்ருத்வம். (5) பரந்யாஸ ரூப ஸாத்யோபாய விசேஷம், அதின் பரிகரங்கள், ஸர்வாதிகாரத்வம், ஸக்ருத்கர்தவ்யத்வம், ஸுக்ரத்வம், அவிளம்பித பல ப்ரதத்வம், ப்ராரப்த நிவர்த்தந க்ஷமத்வம். (6) அதிகாரியினுடைய பராதீந கர்த்ருத்வம், சாஸ்த்ர வச்யத்வம். (7) ரக்ஷகனுடைய பரமகாருணிகத்வம், ஸுப்ரஸந்நத்வம், நிரங்குச ஸ்வாதந்த்ர்யம், துர்நிவாரத்வம், பராநபேக்ஷத்வம், அவஸர ப்ரதீக்ஷத்வம். (8) சரண்யகதனுடைய க்ருதக்ருத்யத்வம், பரிக்ருஹீத உபாய தத் பலங்களைப் பற்றக் கர்த்தவ்யாந்தரத்தில் ப்ராப்தியில்லாமை, பகவதத்யர்த்த ப்ரியத்வம். (9) த்ரைகாலிக விரோதி பூயஸ்த்வம், விரோதி வர்க வைசித்ரயம். (10) அவற்றினுடைய ஈச்வர ஸங்கல்பமாத்ர நிவர்த்யத்வம், ப்ரபந்நேச்சா நியதமான விரோதி நிவ்ருத்தி காலம், விரோதி நிவ்ருத்தி ஸ்வரூபம், ஆத்ம கைவல்ய

வ்யாவ்ருத்த யதாவஸ்தித ஸ்வரூபாவிர்பாவம், பரிபூர்ண பகவதநுபவம், ஸர்வவித கைங்கர்யம், அபுநராவ்ருத்தி. (11) முன்பு சோக ஹேது ப்ராசுர்யம், பின்பு சோகிக்கப் ப்ராப்தியில்லாமை, விமர்ச காலமெல்லாம் நிஸ்ஸம்யத்வம், சோக நிவ்ருத்தி, நிர்பயத்வம், ஹர்ஷ விசேஷம், சரீரபாத கால ப்ரதீக்ஷத்வம், நிரபராத கைங்கர்ய ரஸிகத்வம் என்று இவை ப்ரதாநமாய் மற்றும் இவற்றுக்கு அபேக்ஷிதங்களெல்லாம் சப்த சக்தியாலும் அர்த்த ஸ்வபாவத்தாலும் அநுசிஷ்டங்கள்.

விளக்கம் – [மேலே உள்ளவற்றில் காணப்படும் எண்கள், சரம ச்லோகத்தில் உள்ள அந்தந்த பதங்களுடைய ஆழ்பொருள் ஆகும். அவையாவன - (1) ஸர்வ தர்மாந் பரித்யஜ்ய, (2) மாம், (3) ஏக, (4) சரண, (5) வ்ரஜ என்பதன் தாதுப்பகுதி, (6) வ்ரஜ என்பதன் விகுதி, (7) அஹம், (8) த்வா, (9) ஸர்வ பாப, (10) மோக்ஷயிஷ்யாமி, (11) மா சுச: - என்பவை ஆகும்] சரமச்லோகத்தில் உள்ள பதங்களில் பின்வரும் கருத்துக்கள் மறைந்துள்ளன:

(1) இந்த உபாயத்திற்குத் தகுதியான அதிகாரியின் சிறப்பு, மற்ற எந்தவிதமான உபாயமும் அற்று இருத்தல், செய்வதற்குக் கடினமான அங்கங்களை எதிர்பாராமல் இருத்தல், ஒருவனுடைய சக்திக்கு மீறிய செயல்களைச் செய்யவேண்டிய அவசியம் இன்மை (அல்லது அது போன்ற செயல்களில் முனைதலின் பொருத்தம் இன்மை), இயலாத செயல்களில் ஈடுபடுவதால் எந்தப் பலனும் கிட்டாமல் போதல், இந்த உபாயமானது மற்ற உபாயங்களைப் பொருத்துக் கொள்ளாமை

(2) முமுக்ஷுவுக்கு அனைத்துவிதத்திலும் ஏற்றவனாக அவன் மட்டுமே இருத்தலின் சிறப்பு, சரணம் அடையத்தக்கவனுடைய எளிமையாக அடையத்தக்கவனாக இருத்தல் மற்றும் சிறந்தவனாக இருத்தல் ஆகிய குணங்களுடைய முழுமை அடைந்த நிலை, நன்மை பயக்கவல்லவற்றை மட்டுமே உபதேசிக்கும் தன்மை

(3) அடையத்தக்கவனாக இருப்பவனே தன்னை அடைவதற்கான உபாயமாகவும் உள்ள நிலை, எந்தவிதமான இடையூறும் இன்றி வேறு எதனுடைய துணையையும் எதிர்பாராமல் தனித்து நின்று எந்த ஒரு செயலையும் செய்யும் தன்மை, ஒருவனைக் காப்பதற்காக அந்த மனிதனிடமிருந்து ஏதோ ஒரு சிறிய வாய்ப்பை மட்டுமே எதிர்பார்க்கும் தன்மை, மற்ற எந்தவிதமான உபாயங்களையும் எதிர்பாராத

தன்மை, மற்ற எந்தவிதமான அங்களையும் எதிர்பாராத தன்மை, அனைத்து பலன்களையும் அளிக்கவல்லதான சரணம் புகும்படி உள்ள தன்மை, மற்ற யாரையும் சரணம் புகத்தக்கவர்களாகக் கொள்ளுதலைப் பொறுக்க இயலாத தன்மை, பெரியபிராட்டியும் சேர்ந்து உபாயமாக உள்ள தன்மை

(4) மற்ற உபாயங்களின் இடத்தில் நிற்கக்கூடிய தன்மை, மற்றவர்களுடைய பாரத்தை ஏற்றுக்கொண்டு அவர்களுக்காகச் செயலாற்றும் தன்மை

(5) ஒருவன் தன்னைக் காப்பாற்றும் பொறுப்பை ஒப்படைக்கும்விதமாக உள்ள ஸாதனம், அதன் அங்கங்கள், அந்த உபாயத்தை அனைவரும் கைக்கொள்ளலாம்படி உள்ள தன்மை, ஒருமுறை மட்டுமே இயற்றபடக்கூடியதாக உள்ள தன்மை, மிகவும் எளிதாக இயற்றக்கூடியதாக உள்ள தன்மை, பலன் அளிப்பதில் தாமதம் இல்லாத தன்மை, பலன் அளிக்கத் தொடங்கிவிட்ட பூர்வகர்மங்களையும் விலக்கக்கூடிய தன்மை

(6) இந்த உபாயத்தைக் கைக்கொள்ளும் அதிகாரி ஸர்வேச்வரனை அல்லாமல் வேறு எதற்கும் வசப்படாத தன்மை, சாஸ்த்ரங்களுக்குக் கட்டுப்பட்ட தன்மை

(7) காப்பாற்றுபவனுடைய மிக உயர்ந்த கருணை, எப்போதும் க்ருபையுடன் கூடிய தன்மை, சுருக்கம் அடையாத சுதந்திர தன்மை, தவிர்க்க முடியாதபடி உள்ள தன்மை, வேறு உதவிகளை எதிர்பாராத தன்மை, காப்பதற்கான தருணைத்தை எதிர்பார்க்கும் தன்மை

(8) சரணம் புகுந்தவனுடைய செய்யவேண்டியதைச் செய்துமுடித்த தன்மை, தான் கைக்கொள்கின்ற உபாயம் மற்றும் அதன் பலன் ஆகியவற்றைப் பெறுவதற்காக வேறு எதிலும் ஈடுபடக்கூடாது என்னும் தன்மை, பகவானுக்கு மிகவும் ப்ரியமானவனாக உள்ள தன்மை

(9) மூன்றுகாலங்களிலும் முக்திக்கு உண்டாகக்கூடிய தடைகள், பலவிதமான வடிவங்களில் முக்திக்குத் தடையாக உள்ளவை

(10) அந்தத் தடைகள் அனைத்தும் பகவானுடைய வெறும் ஸங்கல்பத்தாலேயே நீங்கும் நிலை, இவை எப்போது விலகவேண்டும் என்று ப்ரபந்நன் நினைக்கிறானோ அப்போதும் நீங்கும் நிலை, இந்த விரோதிகள் நீங்கும் விதங்கள், ஆத்மாவை அனுபவித்தல் என்பதைக் காட்டிலும் வேறுபட்டதான தனது ஆத்மாவின் உண்மையான ஸ்வரூபம் உள்ளது உள்ளபடி வெளிப்படுதல்,

முழுமையான பகவத் அனுபவம், பகவானுக்கு அனைத்துவிதமான கைங்கர்யங்களையும் செய்தல், மீண்டும் ஸம்ஸாரத்திற்குத் திரும்பாமை

(11) உபாயத்தைக் கைக்கொள்வதற்கு முன்பாக சோகம் நீடிப்பதற்கான காரணம், உபாயத்தைக் கைக்கொண்ட பின்னர் சோகத்திற்கான அவசியம் இன்மை, மேலும் உள்ள காலங்கள் அனைத்திலும் எந்தவிதமான ஐயமும் அற்ற நிலை, சோகங்கள் அனைத்தும் விலகுதல், பயம் அற்ற நிலை, மிகுந்த சிறப்பான மகிழ்ச்சி, எப்போது எந்தச் சரீரம் விலகும் என்று அந்தக் காலத்தை எதிர்நோக்குதல், எந்தவிதமான தோஷங்களும் அற்ற கைங்கர்யங்களைச் செய்தல்

இது போன்ற முதன்மையான பலவும் மற்றும் இவற்றால் எதிர்பார்க்கப்படும் மற்ற அனைத்தும், சரமச்லோகத்தில் உள்ள சொற்களுடைய வலிமை மற்றும் ஆழ்பொருள்களை வெளிப்படுத்தும் இயல்பு ஆகியவற்றால் உணரலாம்படி உள்ளன.

சரம ச்லோகத்தின் திரண்ட பொருள்

மூலம் – “(1) அல்பஜ்ஞனாய், அல்பசக்தியாய், பரிமித காலவர்த்தியாய், விளம்ப க்ஷமனுமன்றிக்கேயிருக்கிற உன்னாலே அறியவும் அநுஷ்டிக்கவும் அரிதாய்ப் பல விளம்பமுமுண்டாயிருக்கிற உபாயாந்தரங்களில் அலையாதே. (2) ஸர்வஸுலபனாய், ஸர்வலோக சரண்யனாய், சரண்யத்வ உபயுக்த ஸர்வாகார விசிஷ்டனான என்னையொருவனையுமே (3) அத்யவஸித்துக் கொண்டு, அங்க பஞ்சக ஸம்பந்நமான ஆத்மரக்ஷா பரஸமர்ப்பணத்தைப் பண்ணு. (4) இப்படி அநுஷ்டிதோபாயனாய், க்ருதக்ருத்யனாய், எனக்கு அடைக்கலமாய், அத்யர்த்த ப்ரியனான உன்னை, (5) பரமகாருணிகனாய், ஸுப்ரஸந்நனாய், நிரங்குச ஸ்வாதந்த்ர்யனாய், ஸ்வார்த்த ப்ரவ்ருத்தனான நானே என் ஸங்கல்ப மாத்ரமே துணையாகக் கொண்டு, (6) பஹுப்ரகாரமாய், அநந்தமாய், துரத்யயமான ஸர்வ விரோதி வர்க்கத்தோடும் பின் தொடர்ச்சியில்லாதபடி துவக்கறுத்து, என்னோடொக்க என்னுடைய ஆத்மாத்மீயங்களை யெல்லாம் அநுபவிக்கையாலே துல்யபோகனாக்கிப் பரிபூர்ண அநுபவ பரீவாஹ ரூபமான ஸர்வதேச ஸர்வகால

ஸர்வாவஸ்தோசித ஸர்வவித கைங்கர்யத்தையும் தந்து உகப்பன். (7) நீ ஒன்றுக்கும் சோகிக்க வேண்டா”, என்று சரமச்லோகத்தில் திரண்ட பொருள்.

விளக்கம் - [மேலே உள்ளவற்றில் காணப்படும் எண்கள், சரம ச்லோகத்தில் உள்ள அந்தந்த பதங்களுடைய ஆழ்பொருள் ஆகும். அவையாவன - (1) ஸர்வ தர்மாந் பரித்யஜ்ய, (2) மாம் ஏகம், (3) சரணம் வ்ரஜ, (4) த்வா, (5) அஹம், (6) ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி, (7) மா சுச: - என்பவை ஆகும்]

சரமச்லோகத்தின் திரண்ட பொருள் என்னவென்றால்:

(1) அற்பமான ஞானம் கொண்டவனாகவும், அற்பமான சக்தி கொண்டவனாகவும், குறுகிய ஆயுள் கொண்டவனாகவும், மோக்ஷம் என்னும் பலனைப் பெறுவதில் உள்ள காலதாமதத்தைப் பொறுக்க இயலாதவனாகவும் நீ உள்ளாய். இப்படிப்பட்ட நீ, உன்னால் அறிவதற்கும் பின்பற்றுவதற்கும் மிகவும் கடினமானதாகவும், பலனைப் பெற்றுத் தருவதில் மிகவும் தாமதத்துடன் கூடியதாகவும் உள்ள மற்ற உபாயங்களை நாடாமல் இருப்பாயாக.

(2) அனைவராலும் எளிதாக அடையலாம்படி உள்ளவனும், அனைத்து லோகங்களும் சரணம் புகுபவனாகவும், அனைவரும் வந்து சரணம் புகுவதற்கு வேண்டிய அனைத்து தன்மைகளையும் கொண்டவனாகவும் உள்ள என்னை மட்டுமே.

(3) நீ கைக்கொண்டு (அல்லது பின்பற்றி), உன்னுடைய ஆத்மாவைக் காப்பாற்றும்படியாக, உனது அனைத்து பாரங்களையும், ஐந்து அங்கங்களுடன் கூடியதான ப்ரபத்தியைச் செய்வாயாக.

(4) இப்படியாக இந்த உபாயத்தைக் கைக்கொண்டவனாகவும், செய்யவேண்டியதைச் செய்தவனாகவும், என்னால் காக்கப்பட வேண்டியவனாகவும், எனக்கு மிகவும் ப்ரியமானவனாகவும் உள்ள உன்னை.

(5) மிகுந்த கருணை நிறைந்தவனும், க்ருபை நிறைந்தவனும், சுருக்கம் அடையாத சுதந்திரமானவனும், எங்கும் நிறைந்தவனும் ஆகிய நான், எனது ஸங்கல்பத்தை மட்டுமே துணையாகக் கொண்டு.

(6) பலவிதமாக உள்ளதும், எண்ணற்றதும், கடப்பதற்கு அரியதும் ஆகிய அனைத்துவிதமான தடைகளும் (அல்லது விரோதிகளும்) உன்னைப் பின்தொடராதபடி அவற்றை அடியுடன் விலக்குவேன். தொடர்ந்து என்னையும், எனது எல்லாவற்றையும் நீ அனுபவிக்கும்படி நான் செய்வதால், எனக்கு சமமாக அனைத்து இன்பங்களையும் நீ அனுபவிப்பாய். மேலும் உன்னுடைய இந்த அனுபவமானது அனைத்து இடங்கள், அனைத்து காலங்கள், அனைத்து நிலைகள் ஆகியவற்றில் அனைத்துவிதமான கைங்கர்யங்களையும் செய்வதான பரிபூர்ணமான ரூபம் கொண்டதாகவே இருக்கும்படியாக நான் மகிழ்வுடன் அளிப்பேன்.

(7) நீ எதனைக் குறித்தும் சோகம் அடையவேண்டாம்.

ஏகம் ஸர்வப்ரதம் தர்மம் ஞீயா ஜுஷ்டம் ஸமாச்ரிதை:
அபேத சோகைராசார்யை: அயம் பந்தா: ப்ரதர்சித:

பொருள் – “இது மட்டுமே” என்றுள்ளதாகவும், அனைத்து பலன்களையும் அளிப்பதாகவும், பெரியபிராட்டியுடன் கூடியுள்ளதாகவும் இருக்கின்ற ஸித்தோபாயமாகிற ஸர்வேச்வரனை அடைந்தவர்களும், இதன் விளைவாகத் தங்கள் துன்பம் அனைத்தும் நீங்கப் பெற்றவர்களும் ஆகிய நம்முடைய ஆசார்யர்களால் இந்த ப்ரபத்தி வழியானது நமக்கு நன்றாக விளக்கப்பட்டது.

குறிப்புடன் மேவும் தர்மங்களின்றி அங்கோவலனார்
வெறித்துளவக்கழல் மெய்யரணென்று விரைந்தடைந்து
பிரித்த வினைத்திரள் பின்தொடராவகை அப்பெரியோர்
மறிப்புடை மன்னருள் வாசகத்தால் மருளற்றனமே

பொருள் – மிகுந்த மன ஒருமைப்பாட்டுடன் செய்யவேண்டியதான பக்தியோகம் முதலான உபாயங்களைப் பின்பற்ற இயலாமல், நறுமணத்துடன் கூடிய துளசியைக் கொண்டதான க்ருஷ்ணனுடைய திருவடிகளையே தகுந்த உபாயம் என்று கொண்டு, அதனையே மிகவும் விரைவாக அடையும்படியாக ஆனோம். இதன் காரணமாக நம்மிடமிருந்து அகற்றப்பட்ட பாபங்கள் நம்மிடம் மீண்டும்

வராதபடியாக நின்றோம். நம்மை வளைத்துக் கொண்டு வசப்படுத்துகின்ற க்ருஷ்ணனுடைய உறுதியான க்ருபை காரணமாக உண்டான சரமச்லோகத்தால், நம்முடைய அறியாமைகள் நீங்கப்பெற்றோம்.

வ்யாஸ ஆம்நாய பயோதி கௌஸ்துபநிபம் ஹ்ருத்யம் ஹரே: உத்தமம்
ச்லோகம் கேசந லோக வேத பதவீ விச்வாஸித அர்த்தம் விது:
யேஷாம் உக்திஷு முக்தி ஸௌத விசிகா ஸோபாந பங்க்திஷு அமீ
வைசம்பாயந சௌநக ப்ரப்ருதய: ச்ரேஷ்டா: சிர: கம்பிந:

பொருள் – பகவான் வ்யாஸருடைய வேதமாகிய மஹாபாரதம் என்ற ஸமுத்ரத்தில் உண்டானதும், பகவானுக்கு இனிமையான கௌஸ்துப மணி போன்றதும் ஆகிய சரமச்லோகமானது, “சரணாகதி” என்னும் ஆழ்பொருள் கொண்டது என்பதை லோகத்தில் உள்ள வசனங்கள் மூலமாகவும் வேதங்கள் மூலமாகவும் நம்முடைய பூர்வாசார்யர்கள் ஆழ்ந்த விச்வாஸத்துடன் அறிந்தனர். முக்தி என்னும் மாடமாளிகைக்குக் கொண்டு செல்லக்கூடிய படிக்கட்டுகளாக உள்ள இந்த ஆசார்யர்களுடைய சொற்களைக் கேட்டு, வைசம்பாயநர் சௌநகர் முதலான உயர்ந்தவர்கள் பலரும் தங்களுடைய தலையை அசைத்து இந்தக் கருத்துக்களுக்குச் சம்மதம் தெரிவிக்கிறார்கள்.

சரமச்லோக அதிகாரம் ஸம்பூர்ணம்

பதவாக்யயோஜநா பாகம் ஸம்பூர்ணம்

தூப்புல் பிள்ளை திருவடிகளே சரணம்

... தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
ஸ்ரீரங்கநாச்சியார் ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்வாமி அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் அருளிச் செய்த

ஆசார்ய ஹ்ருதயம்

இதற்கு ஸ்வாமி மணவாள மாமுனிகள் அருளிச் செய்த வ்யாக்யானம்
(பகுதி – 119)

வ்யாக்யானம் - [7] (எண்பெருக்கிலெண்ணும் திருநாமத்தின் சப்தார்த்தங்களைச் சுருக்கி) "எண் பெருக்கந்நலத்தொண்பொருளீறில வண்புகழ் நாரணன்" என்று முதல் பத்திலே பஜநாலம்பநமாகச் சொல்லப்பட்டதாய், "எண்ணும் திருநாமம்" என்று பஜந தசையில் அநுஸந்திக்கப்படும் திருநாமமான திருமந்த்ரத்தினுடைய சப்தத்தையும் அர்த்தத்தையும், "நாரணம்" என்றும், "நாரணனெம்மான்" இத்யாதியாலும் ஸுக்ரஹமாம்படி சுருங்கவுபதேசித்தும். (மாதவனென்று த்வயமாக்கி) பூர்வோத்தர வாக்யங்களில் ஸ்ரீமத் பதார்த்தங்களைத் திருவுள்ளம் பற்றிக்கொண்டு, "மாதவனென்றென்றோதவல்லீரேல்" என்று கீழ்ச்சொன்ன நாராயண சப்தத்தோடே மாதவனென்கிற வித்தை இரண்டு பர்யாயம் சேர்த்துச் சொல்ல வல்லீர்களாகி லென்கையாலே அந்தத் திருமந்த்ரத்தை அதினுடைய விசதாநுஸந்தாநமான த்வயரூபேண வெளியிட்டு. (கரண த்ரய ப்ரயோக வ்ருத்தி ஸம்ஸாரிகளுக்குக் கையோலை செய்து கொடுத்து) ஈச்வரன் தம்மைக் கொண்டு போகையிலே த்வரிக்கிறபடியாலும் கேட்கிறவர்களுக்கு ப்ரதிபத்தி விஷயமாம்படியாகவும் சுருங்கக் கொண்டு, "தாள்வாய் மலரிட்டு நாள்வாய் நாடீர்", "பாடீரவன் நாமம்", "சுனைநன் மலரிட்டு நினைமின் நெடியானே" என்றிப்படி கரண த்ரயத்தாலும் ப்ரயோகிக்கப்படும் பகவதாச்ரயண வ்ருத்தியை, பரந்த சடங்குகளைச் சுருங்க அநுஷ்டேயார்த்த ப்ரகாசகமான ப்ரயோக வ்ருத்தியாக்கிக் கையோலை செய்து கொடுக்குமாப்போலே ஸம்ஸாரிகளுக்கு தர்சிப்பித்து. (செஞ்சொற்கவிகளுக்குக் கள்ளவிழி காவலிட்டு) "செஞ்சொற்கவிகாளுயிர் காத்தாட் செய்மின்" என்று அவனுக்கடிமை செய்வீர்! அவனுடைய சீலாதிகளிலே அகப்பட்டழுந்திப் போகாமல் உங்களுயிரை நோக்கிக் கொண்டு அடிமை செய்யப்பாருங்கோளென்று உபதேசிக்கையாலே அநுபவ கைங்கர்யங்களோடே நடக்கிற ஸ்தோத்ரிகளுக்கு அரணழியாமல் கள்ளவழி காவலிடுவாரைப்போலே

சீலகுணமாகிற ஆழங்காலில் இழியாதே கொள்ளுங்கோளென்று வஞ்சக்கள்வன் உள்கலந்தழிக்கும் வழிக்குக் காவலிட்டு.

விளக்கம் - (எண் பெருக்கில்) – திருவாய்மொழி (1-2-10) – எண் பெருக்கு அந்நலத்து ஒண்பொருள் ஈறு இல வண்புகழ் நாரணன் – என்று முதல் பத்தில் பஜனம் செய்வதற்கு ஏற்றபடியாகக் கூறப்பட்டதும், திருவாய்மொழி (10-5-1) - எண்ணும் திருநாமம் - என்று பஜனம் செய்யப்படுகின்ற இடத்தில் கூறப்படுவதும் ஆகிய திருநாமமான திருமந்த்ரத்தின் சொல் மற்றும் பொருள் ஆகியவற்றை, திருவாய்மொழி (10-5-2) – நாரணம் – என்றும், திருவாய்மொழி (10-5-2) - நாரணன் எம்மான் – என்றும் உள்ள இடங்களில் மிகவும் எளிதாக அறியும்விதத்தில் சுருக்கமாக உபதேசம் செய்தும். (மாதவன் என்று த்வயமாக்கி) - த்வயத்தின் முதல் வாக்கியம் மற்றும் இரண்டாம் வாக்கியம் ஆகியவற்றில் காணப்படும் "ஸ்ரீமதே" என்ற சொல்லுடைய அர்த்தத்தைத் தனது கடந்த பாசுரங்களில் கூறப்பட்டதான "நாராயணன்" என்ற சொல்லுடன் "மாதவன்" என்ற சொல்லை, இரண்டும் ஒரு பொருளை அளிப்பவையாகக் கொண்டு சேர்த்து உரைப்பீர்களாக என்பதை மனதில் நிறுத்தியவராக, அந்தத் திருமந்த்ரத்தை மிகவும் விரிவாகப் பொருள் தரவல்லதாக உள்ள த்வயரூபமாக வெளியிட்டும். (கரண த்ரய ப்ரயோக வ்ருத்தி ஸம்ஸாரிகளுக்குக் கையோலை செய்து கொடுத்து) - ஸர்வேச்வரன் நம்மாழ்வாராகிய தன்னை அழைத்துக் கொண்டு செல்வதற்கு விரைந்தபடி உள்ளதால், கேட்பவர்களுக்கு மிகவும் எளிதாக விளங்கும்படியாக சுருக்கமாகவே, திருவாய்மொழி (10-5-4) – தாள்வாய் மலரிட்டு நாள்வாய் நாடீர் – என்றும், திருவாய்மொழி (10-5-5) – பாடீர் அவன் நாமம் – என்றும், திருவாய்மொழி (10-5-10) – சுனைநன் மலரிட்டு நினைமின் நெடியானே – என்றும் இவ்விதமாகத் தனது மனம், சொல் மற்றும் சரீரம் ஆகிய மூன்று கரணங்களாலும் செய்யப்படுவதான "ஸர்வேச்வரனை அடைதல்" என்னும் செயலை, மிகவும் விரிவாக உள்ளதான செயல்முறைகளைச் சுருக்கமாக இயற்றலாம் என்பதை உணர்த்தும்விதமான "இவ்விதம் இதனைச் செய்தல் வேண்டும்" என்று மிகவும் எளிதாகச் செய்து காண்பிப்பது போன்று, இந்த ஸம்ஸாரத்தில் உள்ளவர்களுக்குக் காண்பித்து (செஞ்சொற்கவிகளுக்குக் கள்ளவிழி காவலிட்டு) - திருவாய்மொழி (10-7-1) - செஞ்சொற்கவிகாளுயிர் காத்தாட் செய்மின் - என்று "அவனுக்கு மட்டுமே அடிமைத்தனம் செய்வீர்களாக. அவனுடைய சீலம் போன்ற குணங்களில்

சிக்குண்டு ஏதும் செய்யாமல் நிற்காமல், உங்களுடைய ஆத்மாவை நோக்கியபடி அவனுக்குக் கைங்கர்யம் செய்ய முயலுங்கள்" என உபதேசம் செய்வதால், அனுபவ கைங்கர்யங்களுடன் வாழ்ந்தபடி உள்ளவர்களான ஒரு குலம் என்று பிறந்தவர்களுக்கு, அரண் அழிந்து போகாமல், மறைவான பாதைகளை நன்றாகப் பாதுகாப்பது போன்று, சீலம் முதலான குணங்களில் ஈடுபட்டு அசைவற்று நின்று விடாதீர்கள் என்று, வஞ்சக் கள்வனாகிய அவன் நம்முள் புகுந்து நம்மை அழிக்கின்ற வழிக்குக் காவல் செய்து வைத்து.

வ்யாக்யானம் - [8] (மனம் திருத்தி வீடு திருத்தப்போய் நாடு திருந்தினவாறே வந்து விண்ணுலகம் தரவிரைந்து அத்தை மறந்து குடிகொண்டு தாம் புறப்பட்டவாக்கையிலே புக்குத் தான நகர்களை அதிலே வகுத்து குரவை துவரைகளிலே வடிவு கொண்ட சபலனுக்கு தேஹ தோஷமறிவித்து) "தன்பால் மனம் வைக்கத் திருத்தி" என்று "வளவேழுல"கிலே அயோக்யரென்றகன்ற தம்மைத் தன் சீலவத்தையைக் காட்டி மனஸ்ஸைத் திருத்திச் சேர்த்துக் கொண்டு "இன்னமுமிவர் இங்கேயிருக்கில் அயோக்யரென்றகலுவர், அகலவொண்ணாத தேசத்தேறக் கொண்டு போகவேணும்" என்று "வீடுதிருத்துவான்" என்கிறபடியே பரமபதத்தைக் கோடிப்பதாகப்போய், அது செய்து மீளுவதற்கு முன்னே "ஊரும் நாடுமுலகமும் தன்னைப்போல்" என்கிறபடியே தம்முபதேசத்தாலே நாடெல்லாம் திருத்தி, தானிங்கே தம்மை வைத்துக் கொள்ள நினைத்த காரியமும் தலைக்கட்டினவாறே வந்து, "இன்று விண்ணுலகம் தருவானாய் விரைகின்றான்" என்று மீள வந்து பரமபதத்தேறக் கொண்டு போகையிலே த்வரித்து, சரம சரீரமாகையாலே தம்முடைய திருமேனியில் தனக்குண்டான வ்யாமோஹத்தாலே கொண்டு போக விரைந்து, அத்தையுங்கூட மறந்து, "கோவிந்தன் குடிகொண்டான்" என்கிறபடியே ஸபரிகரனாய்க் கொண்டு, "என் மாயவாக்கையிதனுள் புக்கு" என்று த்யாஜ்யமென்று குந்தியடியிட்டுத் தாம் சரக்குக் கட்டிப் புறப்பட்டு நிற்கிற தேஹத்தினுள்ளே தான் புகுந்து, "திருமாலிருஞ்சோலைமலையே" என்கிற பாட்டின்படியே "தான நகர்கள்" என்று தனக்கு வாஸஸ்தாநமான திவ்யநகரங்களில் பண்ணும் விருப்பத்தை யெல்லாம் ஓரோரவயவங்களிலே பண்ணி எல்லாமிதுக்குள்ளேயாக வகுத்து, "அங்கநா மங்கநாமந்தரே மாதவோ மாதவம் மாதவஞ் சாந்தரேணாங்கநா" என்கிறபடியே திருக்குரவையில் பெண்களோடே அநேக விக்ரஹ பரிக்ரஹம் பண்ணி அநுபவித்தாப் போலவும், "ஏகஸ்மிந்நேவ கோவிந்த: காலே தாஸாம் மஹாமுநே, ஜக்ராஹ விதிவத் பாணீந்

ப்ருதக் கேஹேஷு தர்மத:, உவாஸ விப்ர ஸர்வாஸாம் விச்வரூபதரோ ஹரி:" என்கிறபடியே ஸ்ரீமத் த்வாரகையில் தேவிமாருடனே பதினாறாயிரம் விக்ரஹம் கொண்டு அநுபவித்தாப்போலவும்; அநேக விக்ரஹம் கொண்டு தம்முடைய அவயவங்கள் தோறும் அநுபவிக்கும்படி தம் திருமேனியிலே அதிசபலனானவனுக்கு, "பொங்கைம் புலனும் பொறியைந்தும் கருமேந்திரியமைம்பூதம் இங்கிவ்வுயிரேய் பிரகிருதி மானாங்கார மனங்களான உன் மாமாயை மங்கவொட்டு" என்று ஸ்வதேஹ தோஷத்தை அறிவித்து, இத்தை விடுவிக்கவேணும் என்று கால்கட்டி.

விளக்கம் - (மனம் திருத்தி) - திருவாய்மொழி (1-5) - வளவேழ் உலகு – என்ற திருவாய்மொழியில், திருவாய்மொழி (1-5-10) - தன்பால் மனம் வைக்கத் திருத்தி – என்பதற்கு ஏற்ப, "நான் தாழ்ந்தவன்" என்று அகன்று சென்ற நம்மாழ்வாராகிய தன்னை, ஸர்வேச்வரனாகிய அவன் தன்னுடைய சீல குணத்தைக் காண்பித்து மனதைத் திருத்தித் தன்னிடம் சேர்ந்துக் கொண்டு. (வீடு திருத்தப்போய்) - தனது திருவுள்ளத்தில் ஸர்வேச்வரன், "இவர் மேலும் இந்த ஸம்ஸாரத்திலேயே இருந்தால், தன்னைத் தாழ்ந்தவராகவே எண்ணியபடி மீண்டும் நம்மை விட்டு அகன்றுவிடுவார். ஆகவே இவரை நாம் பரமபதம் கொண்டு செல்லவேண்டும்", என்று எண்ணினான்; ஆகவே திருவாய்மொழி (1-5-10) – வீடுதிருத்துவான் - என்று பரமபதத்தை இவருக்காக வைத்து, அதனைச் செய்து மீண்டும் இங்கு வருவதற்கு முன்பாக, (நாடு திருத்தினவாறே) - திருவாய்மொழி (6-7-2) – ஊரும் நாடுமுலகமும் தன்னைப்போல் – என்பதற்கு ஏற்ப தனது உபதேசம் காரணமாக அனைத்து உலகங்களையும் திருத்தி, அவன் இங்கு இவரை வைத்துக்கொள்ள எண்ணிய என்ணமும் நிறைவேறிய பின்னர் , (வந்து விண்ணுலகம் தர விரைந்து) - திருவாய்மொழி (10-6-3) - இன்று விண்ணுலகம் தருவானாய் விரைகின்றான் - என்பதற்கு ஏற்ப மீண்டும் இங்கு வந்து இவரைப் பரமபதத்திற்கு அழைத்துச் செல்வதற்காக விரைந்து வந்து, (அத்தை மறந்து) - இந்தச் சரீரம் இறுதியான சரீரம் என்பதால், நம்மாழ்வாருடைய திருமேனியில் அவனுக்கு ஏற்பட்ட மயக்கம் காரணமாகத் தன்னையும் மறந்து. (குடி கொண்டு தாம் புறப்பட்ட ஆக்கையில் புகுந்து) - திருவாய்மொழி (10-6-7) - கோவிந்தன் குடிகொண்டான் - என்பதற்கு ஏற்பத் தனது பரிவாரங்களுடன் சேர்ந்தவனாக, திருவாய்மொழி (10-7-3) - என் மாய ஆக்கை இதனுள் புக்கு - என்பதற்கு ஏற்ப உள்ளதான கைவிடத்தக்கது என்று

அனைத்தையும் முன்னேற்பாடாகச் செய்து புறப்பட்டு நிற்கும் இந்தச் சரீரத்தில் தான் புகுந்து. (தான நகர்களை அதிலே வகுத்து) - திருவாய்மொழி (10-7-8) - திருமாலிருஞ்சோலைமலையே - என்ற பாசுரத்திற்கு ஏற்ப திருவாய்மொழி (8-6-8) – தான நகர்கள் - என்பதாகத் தான் வாசம் செய்யும் இடங்களாகிய திவ்யதேசங்களில் செய்கின்ற விருப்பங்கள் அனைத்தையும் இவருடைய சரீரத்தில் உள்ள ஒவ்வொரு உறுப்புக்களிலும் வைத்து, அனைத்தும் இவைகளுக்குள் என்று செய்து. (குரவை துவரைகளில் வடிவு கொண்ட சபலனுக்கு) - அங்கநா மங்கநாமந்தரே மாதவோ மாதவம் மாதவஞ் சாந்தரேணாங்கநா - ஒவ்வொரு கோபிகைக்கும் நடுவே ஒரு க்ருஷ்ணன், ஒவ்வொரு க்ருஷ்ணனுக்கு நடுவே ஒரு கோபிகை – என்பதற்கு எற்ப ஆய்ப்பாடியில் உள்ள கோபிகைகளுடன் பல திருமேனிகள் எடுத்து அனுபவித்தது போன்றும், ஸ்ரீவிபு (5-3-17) – ஏகஸ்மிந்நேவ கோவிந்த: காலே தாஸாம் மஹாமுநே, ஜக்ராஹ விதிவத் பாணீந் ப்ருதக் கேஹேஷு தர்மத: - க்ருஷ்ணன் ஒரே நேரத்தில் அனைத்து வீடுகளிலும் இருந்தபடி சாஸ்த்ரம் விதித்த முறைகளுக்கு ஏற்ப அவர்களைத் திருமணம் செய்துகொண்டான் - என்றும், ஸ்ரீவிபு (3-31-20) - உவாஸ விப்ர ஸர்வாஸாம் விச்வரூபதரோ ஹரி: - இரவுபொழுதில் பல திருமேனிகள் எடுத்த க்ருஷ்ணன் அவரவர்கள் வீடுகளில் வசித்தான் – என்றும் கூறுவதற்கு ஏற்ப ஸ்ரீத்வாரகையில் தேவிமார்களுடன் பதினாராயிரம் திருமேனி கண்டு அனுபவித்தது போன்றும், பல திருமேனிகள் எடுத்து தனது அவயவங்கள் அனைத்தையும் அனுபவிக்கும்படியாகத் தனது திருமேனியில் மிகுந்த ப்ரேமை கொண்ட ஸர்வேச்வரனுக்கு, (தேஹ தோஷம் அறிவித்து) - திருவாய்மொழி (10-8-10) – பொங்கை ஐம்புலனும் பொறி ஐந்தும் கருமேந்திரியம் ஐம்பூதம் இங்கிவ்வுயிரேய் பிரகிருதி மானாங்கார மனங்களான உன் மாமாயை மங்கவொட்டு - என்று தனது சரீரத்தின் தோஷத்தை உணர்த்தி, இதிலிருந்து தன்னை விடுவிக்கவேண்டும் என்று அவன் நகராத விதத்தில் அவனுடைய திருவடிகளைப் பற்றி நின்று.

ஸ்வாமி மணவாளமாமுனிகள் திருவடிகளே சரணம்

ஸ்வாமி அழகிய மணவாளப்பெருமாள் நாயனார் திருவடிகளே சரணம்

…தொடரும்

ஶ்ரீ:
ஶ்ரீமதே ராமாநுஜாய நம:

ஶ்ரீரங்கநாயகி ஸமேத ஶ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:
ப்ரபந்நஜந கூடஸ்தரான ஸ்வாமி நம்மாழ்வார் அருளிச் செய்த

திருவாய்மொழி

இதற்கு ஸ்வாமி வடக்குத் திருவீதிப் பிள்ளை அருளிச் செய்த
முப்பத்தாறாயிரப்படி என்னும் ஈடு வ்யாக்யானம்
மூலமும், எளிய தமிழ்நடையும்
(பகுதி – 264)

4-3-4 மாய்ந்தலெண்ணி வாய் முலை தந்த மாயப்பேயுயிர்
மாய்த்த ஆயமாயனே வாமனனே மாதவா
பூத்தண்மாலை கொண்டு உன்னைப்போதால் வணங்கேனேலும் நின்
பூத்தண்மாலைநெடுமுடிக்குப் புனையும் கண்ணி எனதுயிரே

பொருள் - உன்னை அழிப்பதாக முடிவு செய்து உனது திருவாயில் தனது ஸ்தனங்களை வைத்து, உனக்கு நன்மை செய்பவள் போன்று வந்த வஞ்சகியான பூதனையுடைய உயிரை முடித்த இடையர் குலத்தில் வந்தவனே! வியக்க வைப்பவனே! வாமனா! மஹாலக்ஷ்மியை விட்டுப் பிரியாத மாதவா! இப்படிப்பட்ட உன்னைக் குளிர்ந்த மாலைகள் கொண்டு அவ்வப்போது நான் வணங்கவில்லை. ஆனாலும் குளிர்ந்த அழகான மாலைகளால் எப்போதும் அலங்காரம் செய்யப்பட்ட உனது நீண்ட திருமுடியில் சாற்றப்படும் மாலைகள் எனது உயிராகவே உள்ளன.

அவதாரிகை – "பூதநாதிகளுடைய நிரஸந ஸமயத்தில் ச்ரமந்தீர சிசிரோபசாரம் பண்ணப் பெற்றிலேனேயாகிலும் சிசிரோபசாரத்தாலல்லது செல்லாத உன் ஸுகுமாரமான திருமேனிக்குச் சாத்தும் மாலை என் ஸத்தையேயாய்விடுவதே", என்கிறார்.

விளக்கம் - பூதனை முதலான பலரையும் நீ வதம் செய்த அந்தக் காலகட்டங்களில், உனக்கு ஏற்பட்ட களைப்பு நீங்கும்விதமாக குளிர்ந்த பணிவிடைகள் எதனையும் நான் செய்ய இயலவில்லை. ஆனால் இப்படிப்பட்ட குளிர்ந்த பணிவிடைகள் அல்லாமல் வேறு எதனையும் பொறுத்துக் கொள்ள இயலாதபடி மென்மையாக உள்ள உனது திருமேனிக்குச் சாற்றப்படும் மாலை என்பது எனது உயிரே ஆகும்", என்கிறார்.

வ்யாக்யானம் - (மாய்த்தலெண்ணி) அவள் கோலிவந்தபடி அவச்யம் சிலர் பரிய வேண்டும்படியாயிற்று. இன்னாரை மாய்த்தலெண்ணி யென்னாமையாலே, ஜகதுபஸம்ஹரணம் பண்ணக்கிடீர் இவள் கோலிவந்தது என்கிறார்; சரீரியை நலிந்தால் சரீரம் தன்னடையே நசிக்குமிறே. உயிரிலே நலிந்தால் அவயவந்தோறும் தனித்து நலியவேண்டாவிறே; உலகங்கட்கெல்லாம் ஓருயிரிறே. "அஸ்மாந் ஹந்தும் ந ஸம்சய:" என்றாரிறே மஹாராஜர். (வாய் முலை தந்த) அவன் திருப்பவளத்தில் நஞ்சைக் கொடுத்தது தம்முடைய திருப்பவளத்திலே நஞ்சைக் கொடுத்தாற்போலேயிருக்கையாலே, "தந்த" என்கிறாராதல்; அன்றிக்கே, தருகையும் கொடுக்கையும் பர்யாயமாய், கொடுத்த என்னும் பொருள் பெற்றுக் கிடக்கிறதாகவுமாம். (மாயப்பேய்) ஜந்மத்தால் வந்த அறிவுக் கேட்டுக்கு மேலே, வஞ்சந பரையாயும் வந்தாள். அதாவது பேயாய் வருகையன்றிக்கே, தாயாய் வருகை. "தாயாய் வந்த பேய்" என்னக்கடவதிறே. (உயிர் மாய்த்த) அவள் கோலி வந்தது தன்னை அவள் தன்னோடே போக்கினபடி. (ஆய மாயனே) ஆச்சர்ய சக்தி யுக்தனான ஆயனே! இவனும் பிள்ளையாயே முலையுண்டான், அவளும் தாயாய் முலை கொடுத்தாள்; வஸ்து ஸ்வபாவத்தாலே முடிந்த இத்தனை.

விளக்கம் – (மாய்த்தல் எண்ணி) - அவள் விரும்பி வந்த விதத்தில் சிலர் இரக்கம் கொள்ளும்படியான நிலை இருந்தது. இங்கு "க்ருஷ்ணனை" என்று கூறாததால், இந்த ஜகத்திற்கே நாதனாக உள்ள அவனைக் கொல்வதன் மூலம் இந்த ஜகத்தையே அழிக்கும் எண்ணத்துடன் அவள் வந்தாள் என்று கருத்து. இந்த ஜகத்தின் ஆத்மாவாக க்ருஷ்ணனே உள்ளான்; ஆத்மாவை நசித்தால், அது உள்ள சரீரத்தையும் அழிப்பதாகும் அல்லவோ? உயிரை அழிக்கும்போது, அந்தச் சரீரத்தில் உள்ள ஒவ்வொரு உறுப்பையும் தனித்தனியே அழிக்கவேண்டாம்

அல்லவோ? இந்த ஜகத் முழுவதற்கும் அவன் மட்டுமே அல்லவோ ஓர் உயிராக உள்ளான்? இராமாயணம் யுத்தகாண்டம் (17-5) - அஸ்மாந் ஹந்தும் ந ஸம்சய: - விபீஷணனை நோக்கிய சுக்ரீவன், "இவன் என்னைக் கொல்ல வருகிறான்" என்று எண்ணினான். (வாய் முலை தந்த) - க்ருஷ்ணனுடைய திருவாயில் அளிக்கப்பட்ட விஷமானது நம்மாழ்வாராகிய தனது வாயில் விடப்பட்டது போன்று எண்ணியதால், "தந்த" என்கிறார். அல்லது "தருதல், கொடுத்தல்" ஆகிய இரண்டும் ஒரே பொருள் தருகின்ற சொற்கள் என்பதால் இங்கு "கொடுத்த" என்ற பொருள் தருவதாக இந்தச் செயல் உள்ளது எனலாம். (மாயப்பேய்) - தனது பிறவியால் ஏற்பட்ட அறிவுக்கேடு மட்டும் கொண்டவள் என்பது அல்லாமல், வஞ்சனை நிறைந்தவளாகவும் வந்தாள். அதாவது பேயாக மட்டுமே வராமல், தாயாகவும் வந்தாள்; பெரியதிருமொழி (1-5-6) – தாயாய் வந்த பேய் - என்பது காண்க. (உயிர் மாய்த்த) - அவள் விரும்பி வந்த செயலான "உயிரை எடுத்தல்" என்பதை அவள் விஷயத்திலேயே செய்த. (ஆய மாயனே) - வியக்கவைக்கும் சக்தி கொண்ட ஆயனே! இவனும் அவளுடைய பிள்ளையாக நின்று பால் பருகினான், அவளும் தாயாக நின்று பால் அளித்தாள், அந்தந்த வஸ்துக்களின் இயல்பு காரணமாக இங்கு செயல்கள் இனிதாகவே முடிந்தன.

வ்யாக்யானம் - (வாமனனே) அந்த அவதாரத்தில், பூதனை முலை கொடுத்தால் அதுக்கு ப்ரத்யௌஷதமாக முலை கொடுக்கைக்கு ஒரு தாயாகிலும் உண்டிறே அங்கு. "வெங்கொங்கை யுண்டானை மீட்டாய்ச்சியூட்டுவான், தன் கொங்கை வாய்வைத்தாள் சார்ந்து" என்றும், "பேய்ச்சி பாலுண்ட பெருமானைப் பேர்ந்தெடுத்து, ஆய்ச்சி முலை கொடுத்தாளஞ்சாதே" என்றும். அதுவுமின்றிக்கே, இவனைப் பெற்றிட்டு வைத்துத் தாயும் தமப்பனும் தபஸ்ஸிலே அந்யபரராக, ஆஸுர ப்ரக்ருதிகளிருந்தவிடத்தே தானே போய்க் கிட்டும்படியாயிறே இருப்பது. அவர்கள் தான் இருந்தவிடத்தே வந்து கிட்டினாற் போலேயன்றிறே தான் எதிரிகளிருந்தவிடத்தே சென்று கிட்டுமது; மிகவும் வயிறெரித்தலுக்கு உடலாயிருக்குமிறே. அத்தையிறே "சீராற் பிறந்து சிறப்பால் வளராது பேர் வாமனா காக்கால் பேராளா" என்று வயிறு பிடித்தது. (மாதவா) "தீ நாள் திருவுடையார்க்கில்லை" என்கிறபடியே, இவ்வபாயங்களில் இவன் தப்பிற்று அவள் நெஞ்சோடே கடாக்ஷிக்கையிறே. ஓரபாயமுமில்லையேயாகிலும்

பெரியபிராட்டியாரும் அவனுமான சேர்த்திக்கு மங்களாசாஸநம் பண்ணுவார் தேட்டமாயிருக்குமிறே; “வடிவாய் நின் வலமார்பினில் வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு” என்னா நின்றார்களிறே பரிவர். (பூத்தண் மாலை கொண்டு) குளிர்த்தியையுடைத்தான பூமாலையைக் கொண்டு. பூதநாதிகள் வந்து கிட்டின அவ்வவகாலங்களிலே திருவடிகளிலே வந்து விழுந்து சிசிரோபசாரம் பண்ணப் பெற்றிலேனேயாகிலும். (நின் பூத்தண்மாலை நெடுமுடிக்கு) உன்னுடைய குளிர்ந்த பூமாலையாலல்லது செல்லாதபடியாய் ஆதிராஜ்ய ஸூசகமான திருவபிஷேகத்துக்கு விரும்பிச் சாத்தும் மாலை, என் ப்ராணன், என் ஸத்தையாய்விட்டது.

விளக்கம் - (வானமனே) - மூன்றாம் திருவந்தாதி (74) - வெங்கொங்கை யுண்டானை மீட்டாய்ச்சியூட்டுவான், தன் கொங்கை வாய்வைத்தாள் சார்ந்து - என்றும், மூன்றாம் திருவந்தாதி (29) – பேய்ச்சி பாலுண்ட பெருமானைப் பேர்ந்தெடுத்து, ஆய்ச்சி முலை கொடுத்தாளஞ்சாதே – என்றும் கூறுவதற்கு ஏற்ப அந்த க்ருஷ்ணாவதாரத்தில் பூதனை வந்து விஷம் நிறைந்த பால் கொடுத்தபோது, அதற்கு மாற்றாக மருந்து போன்ற பாலை அளிப்பதற்கு ஒரு தாய் அங்கு இருந்தாள். ஆனால் அது போன்று யாரும் இன்றி, வாமனனாக வந்த இவனைப் பெற்றவரான இருவரும் தவத்தில் நிலைநின்றவர்களாக இருக்க, அஸுரர்கள் நிறைந்த இடத்திற்குத் தானே சென்று அடையும்படியாக அல்லவோ இருந்தான்? அந்த அவதாரத்தில் அவர்கள் இவன் உள்ள இடம் தேடி வந்தனர்; ஆனால் இந்த அவதாரத்தில் இவன் எதிரிகள் உள்ள இடம் தேடிச் செல்லும்படியாக அல்லவோ உள்ளது? இதனைக் கண்டு சிலர் பொறுக்க இயலாமல் வயிற்றைப் பிடித்துக் கொள்ளக்கூடும் என்பதை பெரியதிருவந்தாதி (16) - சீராற் பிறந்து சிறப்பால் வளராது பேர் வாமனா காக்கால் பேராளா – என்பதில் காணலாம். (மாதவா) – “தீமை நிறைந்த நாள்” என்பது மஹாலக்ஷ்மியை எப்போதும் தங்களுடன் கொண்டிருப்பவர்களுக்கு வருவதில்லை. இது போன்ற பலவிதமான அபாயங்களிலிருந்து அவன் தப்பியது என்பது, இவள் எப்போதும் அவன் திருமார்பில் உள்ளதால் அல்லவோ? எந்தவிதமான அபாயமும் இல்லை என்றாலும், பெரியபிராட்டியாரும் அவனுமாகச் சேர்ந்து நிற்கும் இந்த நிலை என்பது அவனைப் புகழ்ந்து உரைப்பதற்கு ஏற்றபடி உள்ளது. திருப்பல்லாண்டு (1)

- வடிவாய் நின் வலமார்பினில் வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு – என்று கூறுவர் அல்லவோ? (பூத்தண் மாலை கொண்டு) - குளிர்ச்சி பொருந்திய மாலையைக் கொண்டு வந்து. பூதனை முதலானவர்கள் வந்து உன்னைத் துன்புறுத்திய அந்தந்த காலகட்டங்களில், குளிர்ந்த மலர்கள் கொண்டு உனது திருவடிகளில் விழுந்து வணங்கி, உனது களைப்பு நீங்கியபடியாக நான் செய்யும் வாய்ப்பு எனக்குக் கிட்டவில்லை என்றாலும், (நின் பூத்தண்மாலை நெடுமுடிக்கு) - குளிர்ந்த மலர் மாலை அல்லாமல் வேறு ஏதுவும் பொருந்தாது என்று கூறலாம்படியாக, அனைத்தையும் அரசாளுகின்ற நிலையை மறைமுகமாக உணர்த்துகின்ற உன் திருமுடிக்குச் சேர்கின்ற மாலையாக எனது உயிர் உள்ளது.

4-3-5 கண்ணி எனதுயிர் காதல் கனகச் சோதி முடி முதலா
எண்ணில் பல்கலன்களும் ஏலுமாடையுமஃதே
நண்ணி மூவுலகும் நவிற்றுங் கீர்த்தியுமஃதே
கண்ணனெம்பிரானெம்மான் காலசக்கரத்தானுக்கே

பொருள் - காலத்தை வழி நடத்துகின்ற சக்கரத்தாழ்வானைக் கொண்டவனாகவும், அத்தகைய அழகைக் காண்பித்து என்னை அடிமையாக்கிக் கொண்ட எனது ஸ்வாமியும், காலதத்வம் உள்ளவரை இந்த அழகை நான் அனுபவிக்கும்படியாகச் செய்யும் தாராளமானவனும் ஆகிய எனது க்ருஷ்ணனுக்கு, என்னுடைய உயிரானது, மாலையாக நின்றது. என்னுடைய அளவற்ற ப்ரேமையானது, பொன்மயமாகவும் ஒளியை வீசியபடியும் உள்ளதான க்ரீடம் முதலான பலவிதமான ஆபரணங்களாக நின்றது. இத்தகைய ப்ரேமையே, “அனைத்தைக் காட்டிலும் இவனே உயர்ந்தவன்” என்பதை வெளிப்படுத்துகின்ற அவனுடைய திருப்பீதாம்பரமாகவும் நின்றது. இந்த அன்பே, மூன்று உலகங்களும் அடைந்து நின்ற உரைக்கின்ற அவனுடைய கீர்த்தியாகவும் உள்ளது.

அவதாரிகை – “தம்முடைய ஸ்நேஹாதிகள் ஒரொன்றே ஆபரணாதி ஸர்வ பரிச்சதங்களுமாயிற்று அவனுக்கு”, என்கிறார்.

விளக்கம் - தனது ப்ரேமை முதலான ஒவ்வொன்றும் அவனுடைய ஆபரணங்கள் போன்றதான அங்கங்களாக உள்ளன என்கிறார்.

வ்யாக்யானம் - (கண்ணி எனதுயிர்) நான் “என்னது” என்றிருக்கிறதைகிடீர் அவன் தனக்கு மாலையாகக் கொண்டது. “மார்வத்து மாலை” என்கிறவளைத் தனக்கு மாலையாகக் கொள்ளுகை ப்ராப்தம்; அது ஒழிய என் ஸத்தையைக்கிடீர் தனக்கு மாலையாகக் கொள்ளுகிறது. (காதல் இத்யாதி) ஸ்ப்ருஹணீயமாய் ஆதிராஜ்ய ஸூசகமான என்னுடைய காதல். இவருடைய ஸ்நேஹம் ஆபரணமாவதென் என்னில், இவருடைய ஸ்நேஹத்துக்குத்தான் விஷயமாகப் பெற்ற இத்தையே, தனக்கு அநேகாபரணங்கள் சாத்தினாற் பிறக்கும் புகருண்டாக அவன் நினைத்திருக்கையாலே, அத்தைப் பற்றச் சொல்லுகிறது.

விளக்கம் - (கண்ணி எனதுயிர்) – நான், “என்னுடையது” என்று எண்ணியுள்ள ஆத்மாவை அல்லவோ அவன் தனது மாலையாகக் கொண்டுள்ளான்? திருவாய்மொழி (10-10-2) – மார்வத்து மாலை – என்பவளை அல்லவோ தனது மாலையாகக் கொள்வதற்கு ஏற்றதாக இருக்கும்; அவளை விடுத்து எனது உயிரைத் தனது ஆத்மாவாகக் கொண்டானே என்று வியக்கிறார். (காதல் இத்யாதி) - அனைவராலும் விரும்பத்தக்கதாகவும், அனைத்தையும் இவனே நியமிக்கிறான் என்பதை வெளிப்படுத்துவதாகவும் உள்ள க்ரீடம் முதலான பல என்ணற்ற திருவாபரணங்கள் எனது ப்ரேமையே ஆகும். ஆனால் இவருடைய ப்ரேமை இது போன்று ஆகுமோ என்பதற்கு விடை அளிக்கிறார். இவருடைய அன்பிற்கு, தான் விஷயமாகப் பெற்ற இவற்றை, தனக்குப் பல ஆபரணங்கள் சாற்றினால் ஏற்படும் மகிழ்வாக இவன் எண்ணுவதால் இவ்விதம் கூறுகிறார்.

வ்யாக்யானம் - (ஏலும் ஆடியும் அஃதே) திருவரைக்குத் தகுதியான திருப்பீதாம்பரமும் அக்காதலே. ஒருநாள் ஸ்ரீவைஷ்ணவ வண்ணாத்தான், திருப்பரிவட்டங்களை அழகியதாக வாட்டிக் கொண்டு வந்து எம்பெருமானார்க்குக் காட்ட, போர த்ருப்தராய் அவனைப் பெருமாள் திருவடிகளிலே கைப்பிடித்துக் கொண்டு புக்கு, “நாயந்தே! இவன் திருவரைக்கு ஈடாம்படி வாட்டினபடி திருக்கண் சாத்தியருளவேணும்” என்று இவற்றைக் காட்டியருள, கண்டு உகந்தருளி

உடையவரை அருள்பாடிட்டருளி, "இவனுக்காக ரஜகன் நம் திறத்தில் செய்த குற்றம் பொறுத்தோம்" என்று திருவுள்ளமாயருளினார். (ஏலுமாடையுமஃதே) ஏக ஜாதீயங்கள் பலவாகை தவிர்ந்து, விஸஜாதீயங்களும் பலவாகத் தொடங்கிற்று. புருஷோத்தம லக்ஷணமான திருப்பிதாம்பரமும் அக்காதலே. இவர் நெடுங்காலங் கூடிப் பண்ணுகிற திருவாபரணமும் திருப்பரிவட்டமுமிறே. "அறியாக் காலத்துள்ளே யடிமைக் கணன்பு செய்வித்து" என்று இவருடைய காதல் ஸத்தா ப்ரயுக்தமிறே. "மஹாராஜதம்வாஸ". "பொய்யில் பாடலா"கையாலே, "இது கூடுமோ? என்று ஸம்சயிக்க வேண்டா.

விளக்கம் - (ஏலும் ஆடியும் அஃதே) - அவனுடைய அழகான இடுப்பிற்கு ஏற்றதான பட்டுப்பீதாம்பரமும் இவருடைய ப்ரேமையே ஆகும். ஒருநாள் ஒரு வண்ணான் பெருமாளுடைய திருப்பரிவட்டங்களை மிகவும் நேர்த்தியாக வாட்டிக்கொண்டு வந்து எம்பெருமானாரிடம் காண்பித்தான். அவரும் மிகவும் மகிழ்ந்தவராக, அவனைக் கைப்பிடித்துக் கொண்டு பெருமாளிடம் சென்று, "நாயந்தே! உம்முடைய இடுப்பிற்குச் சேரும்படியாக இவன் வாட்டிக்கொண்டு வந்த பட்டாடையை நீவிர் உமது திருக்கண்கள் குளிர நோக்கவேண்டும்", என்று விண்ணப்பித்தார். அப்போது அதனைக் கண்டு மிகவும் மகிழ்ந்த பெருமாள் உடையவரிடம், "நாம் முன்பு க்ருஷ்ணனாக அவதரித்தபோது ஒரு வண்ணான் நம்மிடம் விரும்பம் அற்ற முறையில் நடந்துகொண்டான். அவன் செய்த தவறை இந்த வண்ணானுக்காக நாம் மன்னித்தோம்", என்றான். (ஏலும் ஆடையும் அஃதே) - ஒரே போன்ற பொருள் மட்டும் என்றல்லாமல் இவருடைய ப்ரேமையானது பல பொருள்களாகவும் நிற்கிறது. இவனே புருஷர்களில் உயர்ந்தவன் என்பதை உணர்த்துகின்ற திருப்பீதாம்பரமும் இந்த அன்பே ஆகும். திருவாய்மொழி (2-3-3) – அறியாக் காலத்துள்ளே யடிமைக் கணன்பு செய்வித்து – என்பதற்கு ஏற்ப இவருடைய ப்ரேமை என்பது முதலிலேயே உள்ளது அல்லவோ? ஆனால் இது உண்மையோ என்ற சந்தேகம் எழலாம்; திருவாய்மொழி (4-3-11) – பொய்யில் பாடல் – என்பதால் இது உண்மையே ஆகும்.

வ்யாக்யானம் - (நண்ணி மூவுலகும் இத்யாதி) விசேஷஜ்ஞரேயன்றிக்கே, மூவுலகிலுள்ளாரும் வந்து கிட்டிக் கடல்கிளர்ந்தாற்போலே ஸ்துதிக்கிற கீர்த்தியும் அக்காதலே. "இவர் காதலித்து பின்பு அந்யபரரும் அநந்யபரராய் ஏத்தாநின்றார்கள்" என்றாயிற்று அவன் நினைத்திருக்கிறது. இக்காதலுக்குக் கைதொட்டு க்ருஷி பண்ணினபடி சொல்லுகிறது மேல்; வ்ருத்தவான்களைக் காட்டிக்காணும் இவரை வ்ருத்தி பரராக்கிற்று. (காலசக்கரத்தான் எம்பிரான் எம்மான் கண்ணனுக்கு) கையும் திருவாழியுமான அழகைக் காட்டி எனக்கு அநந்ய பரத்வ மஹோபகாரத்தைப் பண்ணி. "கழிவதோர் காதலுற்றார்க்குமுண்டோ கண்கள் துஞ்சுதல்" என்னப் பண்ணின என் ஸ்வாமியான க்ருஷ்ணனுக்கு. (காலசக்கரம்) பகலை இரவாக்க வல்லவனிறே. காலத்தை நடத்துகிற திருவாழி. காலவச்யத்தையைப் போக்கும் திருவாழியென்னுதல். "நார்ச்சயிஷ்யந்தி" என்கிற காலத்திலும், "இருள் தரு மா ஞால"த்திலும் இருளையோட்டி, "அருளார் திருச்சக்கரமாய்", திருக்கையைத் தான் பிரியதாற்போலே திருவடிகளை நான் பிரியாதபடியான ருசி ஜநகமான திருவாழி. அவன் கையிலே நின்றே, இவன் காலிலே விழும்படி பண்ணுமவனிறே.

விளக்கம் - (நண்ணி மூவுலகும் இத்யாதி) - சிறந்த ஞானம் கொண்டவர்கள் மட்டும் அல்லாமல் மூன்று உலகில் உள்ள அனைவரும் சேர்ந்து வந்து, கடலானது பெரும் ஓசை எழுப்புவது போன்று துதித்து நிற்கும் கீர்த்தியும் இவருடைய ப்ரேமையே ஆகும். "இவர் இவ்விதம் நம்மிடம் காண்பித்த ப்ரேமை காரணமாக, மற்ற பொருள்களை விரும்பியவர்கள் கூட அவற்றைக் கைவிட்டு நம்மையே துதித்தபடி நின்றனர், என்றல்லவோ அவன் எண்ணியுள்ளான்? (காலசக்கரத்தான் எம்பிரான் எம்மான் கண்ணனுக்கு) – திருக்கரமும் அதில் உள்ள சக்ரத்தாழ்வாரும் என்றுள்ள அழகைக் காண்பித்து என்னை மயக்கி, வேறு எதிலும் வசப்படாத தன்மை என்பதை எனக்கு அளித்து, திருவிருத்தம் (97) – கழிவதோர் காதலுற்றார்க்குமுண்டோ கண்கள் துஞ்சுதல் - என்பதற்கு ஏற்பச் செய்த எனது ஸ்வாமியாகிய க்ருஷ்ணனுக்கு. (கால சக்கரம்) - சூரியனை மறைத்ததன் முலம் பகலையும் இரவாகச் செய்பவன் என்பதால் "கால சக்கரம்" என்கிறார். காலத்தை வழி நடத்துகின்ற சக்கரத்தாழ்வான். காலத்தின் பிடியில் சிக்கித் தவிப்பதை நீக்கவல்ல சக்கரத்தாழ்வான். ஸ்ரீவிஷ்ணுபுராணம் (6-1-41) – நார்ச்சயிஷ்யந்தி –

கலிகாலத்தில் விஷ்ணுவை பூஜிப்பதில்லை - என்றுள்ள காலத்தில் கூட, திருவாய்மொழி (10-6-1) - இருள் தரு மா ஞாலம் - என்பதற்கு ஏற்ப உள்ள இந்த உலகத்தில் கூட, இருளை விலக்கி அனைவருக்கும் திருவிருத்தம் (33) - அருளார் திருச்சக்கரமாய் - என்பதற்கு ஏற்ப உள்ள சக்கரத்தாழ்வான். அவனுடைய திருக்கரத்தை விட்டுப் பிரியாதபடி தான் உள்ளது போன்று அவனுடைய திருவடிகளை விட்டு நான் விலகாதபடி எனக்கு ருசியை ஏற்படுத்திய சக்கரத்தாழ்வான். அவன் திருக்கரத்தில் நின்று மற்றவர்கள் அனைவரும் அவன் திருவடிகளில் விழும்படிச் செய்யும் சக்கரத்தாழ்வான்.

ஸ்வாமி நம்மாழ்வார் திருவடிகளே சரணம்
ஸ்வாமி நம்பிள்ளை திருவடிகளே சரணம்
ஸ்வாமி வடக்குத்திருவீதிப்பிள்ளை திருவடிகளே சரணம்

...தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்வாமி ஆளவந்தார் அருளிச் செய்த

சது: ச்லோகீ

இதற்கு ஸ்வாமி பெரியவாச்சான்பிள்ளை மற்றும் ஸ்வாமி நிகமாந்த மஹாதேசிகன் அருளிச் செய்த வ்யாக்யானங்கள்
மூலமும், எளிய தமிழ்நடையும்
(பகுதி – 9)

ஸ்வாமி தேசிகன் அருளிச்செய்த வ்யாக்யானம்

ஒரு சிலர், "அனைத்தையும் ஸ்ருஷ்டிப்பவனாகிய பகவானால் அதிஷ்டானம் செய்யப்படும் ப்ரக்ருதியே மஹாலக்ஷ்மி ஆவாள்", என்று கூறுகிறார்கள். வேறு சிலர், "பகவானுடைய இருப்பு, அஹங்காரம், ப்ரகாரம், சக்தி, வித்யை, இச்சை மற்றும் அனைத்தையும் அனுபவிக்கும் தன்மை ஆகியவையே மஹாலக்ஷ்மி", என்று கூறுகிறார்கள்; சாஸ்த்ரங்களில் (அஹிர்புத்ந்ய ஸம்ஹிதை, லக்ஷ்மீ தந்த்ரம்) இப்படியாகவே கூறப்பட்டதாக அவர்கள் உரைக்கிறார்கள். ஆனால் அவர்கள் கூறும் அந்தச் சாஸ்த்ரத்திலேயே, "மஹாலக்ஷ்மியை சேதந வஸ்து ஆவாள்" என்று எந்தவிதமான முரண்பாடும் இன்றி உரைக்கப்பட்டதால், அவர்களும் அவர்களுடைய கருத்துக்களும் தள்ளப்படுகின்றன. இவ்விதம் மஹாலக்ஷ்மியானவள் சேதந வஸ்துவே ஆவாள் என்னும் கருத்தானது இந்த ஸ்தோத்திரத்திலேயே "தே (உனக்கு), த்வாம் (உன்னை)" முதலான பதங்களால் உணர்த்தப்பட்டது. "அவனுடைய இருப்பாகவே இவள் உள்ளாள்" என்பது போன்ற கருத்துக்கள், மஹாலக்ஷ்யிடம் பகவானுக்கு அந்தரங்கமான விசேஷம் உண்டு என்றும், இவள் விசேஷமாக உள்ளாள் என்றும் கூறுவதால் உரைக்கப்படுகின்றன. இவள் ப்ரக்ருதியைக் காட்டிலும் வேறுபட்டவள் என்ற கருத்தானது, இந்த ச்லோகத்தில் உள்ள "தே யவநிகா - உனக்குத் திரை" என்பதன்

மூலம் உணர்த்தப்பட்டது. ப்ரக்ருதி என்ற சொல்லால் கூறப்பட்டாள் என்பதால் மட்டுமே, ஸத்வ ரஜோ தாமஸ குணங்கள் கொண்ட ப்ரக்ருதி இவளே ஆவாள் என்று உரைப்பது சரியல்ல. பாஞ்சராத்ர அதிகரண பாஷ்யத்தில் – வாஸுதேவ: பரா ப்ரக்ருதி: - வாஸுதேவனே உயர்ந்த ப்ரக்ருதி – என்றும், ப்ரஹ்மஸூத்ரம் (1-4-23) – ப்ரக்ருதிச்ச ப்ரதிஜ்ஞா த்ருஷ்டாந்த அனுபரோதாத் - ப்ரஹ்மமே உபாதனக்காரணம் – என்றும் கூறப்படுகின்ற கருத்துக்களின்படி, பகவானிடமும் இவ்விதமே கூறப்படவேண்டியதாகும் என்பதால், இவ்விதம் மஹாலக்ஷ்மியே ப்ரக்ருதி என்று உரைப்பது பொருத்தம் அல்ல.

ஸ்வாமி ஆளவந்தார் திருவடிகளே சரணம்

ஸ்வாமி பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்

ஸ்வாமி நிகமாந்த மஹாதேசிகன் திருவடிகளே சரணம்

… தொடரும்